ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018

IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301

office@iijif.com
https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO

Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER

ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சி.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பி.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2018 மலர் : 4 இதழ் : 13
May 2018 Volume IV Issue 13

# உள்ளே ...

தொகுதி - ஒன்று

## தமிழ்ச் செவ்வியல்

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?
முனைவர் ஆ.மணி | 4

பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்
முனைவர் அ.மோகனா | 12

யாப்பியலும் கணக்கியலும்
முனைவர் இரா. இராஜா | 19

வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்
முனைவர் மு.நாகராஜன் | 40

திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை
விஸ்வேஸ்வரன் | 45

தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
திரவியராசா நிரஞ்சினி | 53

சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்
கு. தனலட்சுமி | 75

பழந்தமிழரின் போர் முறைகள்
அ.பிரீதா | 79

முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு
மு.தமிழ்முல்லை | 83


பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்
ரெ. அருணா தேவி | 87

சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்
முனைவர் கு.சரஸ்வதி | 92

எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)
இரா. வைதேகி | 96

...

UGC APPROVED JOURNAL NO: 64244




அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்
சி. யுவராஜ் | 99

அகநானூற்றின் கட்டமைப்பு
ந. மாலதி | 104

குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்
இரா. பிரசன்னா | 107

நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்
ப.மணிகண்டன் | 111

குறுந்தொகை உணர்த்தும் அறம்
முனைவர் ரா. ராஜராஜன் | 115

நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்
முனைவர் நா. மலர்விழி | 119

சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்
முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்
பெ.ராஜா | 126

வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை
முனைவர் மா.ஆசியாதாரா | 130

## தொகுதி - இரண்டு

## காப்பிய இலக்கியம்

ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்
முனைவர் வி.மல்லிகா | 136

நளன்கதை கூறும் இலக்கியங்கள்
Rajadurai.L | 140

## பக்தி இலக்கியம்

ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை
க. தேவி | 144

அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்
முனைவர் மீ. கோமதி | 148

ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்
க.ரேவதி | 152

## தற்கால இலக்கியம்

'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்
முனைவர் வீ.மீனாட்சி | 155

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு
ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு
ப. புவனேஸ்வரி | 163

தினமணி இதழும் தலையங்கமும்
முனைவர் இரா. நித்யலட்சுமி | 167

## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்
சே.முனியசாமி | 171

பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்
அரியரெத்தினம் - அனேஜா | 182

சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு
வினாயகமூர்த்தி - வசந்தா | 192

சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்
முனைவர் அ.புவியரசு | 203

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்
யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

வள்ளலார் வகுத்த இனம்
கா. தினேஷ் | 230

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்
ஆ. ஷைலா ஹெலின் | 233

வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்
யேசுஜயா டிலானி | 238

ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்
Shandru Mariyadas | 254

பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்
பி.விஜி | 269

## நூல் மதிப்பீடு

சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை
த.சத்தியராஜ் | 277

வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்
முனைவர் மா.பரமசிவன் | 286

...

மதிப்பிடப்பெற்றது

# சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை
பேராசிரியர் & இயக்குநர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.



பெ.குபேந்திரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

காப்பியங்கள் காலத்தைக் கடந்து கருத்துக்களைத் தாங்கிச் செல்லும் வரலாற்றுப் பெட்டகமாகும். பழந்தமிழ்க் காப்பியங்களுக்கு உரையாசிரியர்கள் செய்துள்ள தொண்டு அளப்பரியது. அவ்வகையில் காப்பியத்திற்குத் தொண்டாற்றிய புலமைச் செல்வர்களை நூலாசிரியர், உரையாசிரியர், கற்பிக்கும் ஆசிரியர் என மூவகைப்படுத்தலாம். இம்மூவருள் நூலாசிரியரின் உள்ளக்கிடக்கையை உய்த்துணர்ந்து கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தெளிய அறிவிக்கும் நுண்மாண் நுழைபுலமும் சொல்வளமும் ஒரு சேரப் பெற்றவர்கள் உரையாசிரியர்களேயாவர். அத்தகைய உரையாசிரியரான அரும்பத உரைகாரரின் வரலாறு, இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதுவதற்கான காரணம், அதற்கான சமூகப் பின்புலங்கள் போன்றவற்றினை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொல்காப்பியம் குறிப்பிடும் உரை வகைகள்**

மூலநூலின் சிறப்பினை வெளிப்படுத்துவது உரை ஆகும். தொல்காப்பியர் காலத்திலேயே உரைநடை தோன்றிவிட்டதென்பதற்கு,

*அவற்றுள்*
*நூல் எனப்படுவது நுவலும் காலை*
*முதலும் முடிவும் மாறுகோள் இன்றி*
*தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி*
*உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து*
*நுண்ணிதின் விளக்கல் அதுஅதன் பண்பே* (தொல்.பொருள்.செய்யு.159)

எனும் தொல்காப்பியம் சான்றாகும். இதனால் நூலின் உட்பொருளை விளக்குவது உரையின் பண்பு என்பது அறியப் பெறுகிறது.

**அரும்பத உரையாசிரியர் வரலாறு**

சிலப்பதிகாரத்திற்குக் காலத்தால் முந்திய உரையாசிரியர் அரும்பதஉரைகாரர் ஆவர். இவ்வுரைகாரரை அரும்பத உரைகாரர் என்று முதன்முதலில் குறிப்பவர் அடியார்க்கு நல்லார். சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில்,

*ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்*
*அரச குமரரும் பரத குமரரும்*
*கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்*
*இவர்பரித் தேரினர் இயைந்தொருங்கு ஈண்டி* (சிலம்பு.5:157-160)

எனவரும் அடிகளில் எண்பேராயம் குறித்து மொழிகையில் "*கரணத்தியல்வர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர்*

*இனையரெண்பேர் ஆயமென்ப எனுமிவர் இனி சாந்து பூ........ அவைக்களத் தாரைந்து (157 உரை) எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்"* எனக் குறிப்பதன்வழி அறிய இயலும்.

**அரும்பதவுரைகாரர் - பெயர்ககாரணம்**

ஒரு காலத்தில் அரும்பதவுரைக்குச் சிறப்புப்பாயிரம் இன்மையாலும் பிற வரலாறுகள் இன்மையாலும் அடியாருக்கு நல்லார் உரை போல எல்லோரும் படித்துப் பயனடையுமாறு இல்லாது கற்றோர் மட்டுமே பயன்படத்தக்க சுருக்கவுரையாக இருத்தலாலும் இவருடைய வரலாறு விளக்கம் பெறவில்லை என்று கருதுவதற்கு இடமுண்டு. இருப்பினும் நீர்ப்படை காதையில்,

*செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக*
*உயிர்த் தொகை உண்ட ஒன்பதிற் றிரட்டியென்*
*றியாண்டு மதியு நாளும் கடிகையும்*
*ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள* (சிலம்பு.27:7-10)

என வரும் அடிகளுக்கு அரும்பதவுரைகாரர், *"கூற்றுவன் செல்கின்ற உயிரைக் கவரும் தொழில் பெருகும்படியாக, உயிர்த்தொகை உண்டவனாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற் றிரட்டியென்று அவற்றோடே கூட்டியெண்ண தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டிலும், இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனக விசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தவெண்ண"* என்று உரை எழுதியுள்ளார். இந்த யுத்தங்களை இதே முறையில் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார்,

*தேவாசுர ராமாயண மாபாரதம் உளவென்று*
*ஓவா உரை ஓயும்படி உளதப்பொரு களமே* (களம் பாடியது-9)

என்றுரைப்பார். இதைக்கொண்டு செயங்கொண்டாரே அரும்பத உரைகாரர் என்று சிலர் குறிப்பிடுவர். ஆயின் இது பொருத்தமன்று. செயங்கொண்டார் முதற் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்தவர். அரும்பதவுரைகாரர் இராசராசன் காலத்து வாழ்ந்தவர். இருவரும் ஏறக்குறைய 80-100 ஆண்டு இடைவெளியிட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். அன்றியும் "தேவாசுர யுத்தம் என்ற கருத்து தமிழ் இலக்கியப் பரப்பில் சிந்தாமணியிலும்" வேறுயிடங்களிலும் வருவதால் அரும்பதவுரைகாரர் செயங்கொண்டார் எனக் கொள்வதில் பொருத்தமின்மை புலப்படும்.

**அரும்பதவுரைகாரரின் காலம்**

அரும்பதவுரையாசிரியர் காலத்தை அறிவதற்குத் திட்டமான ஆதாரங்கள் இல்லை. இருப்பின் உரையின் தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் இருப்பதைக் கொண்டு இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்று இலக்கிய வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவர். ஆயின் இதில் ஐயப்பாடு உள்ளது. இவர் மேற்கோள் காட்டும் இலக்கியங்களில் புறப்பொருள் வெண்பாமாலை முதலிடம் பெறுகிறது. அந்நூலின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு ஆதலின் இவர் ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கூறலாம். அத்திரி - எனும் சொல்லுக்கு கழுதை என்று திவாகரமும், ஒட்டகம் என்று பிங்கல நிகண்டும் கூறுகின்றன. ஆனால் திவாகரமும், பிங்கலமும் 9,10 ஆம் நூற்றாண்டினது. 9-ஆம் நூற்றாண்டில் கழுதையாக இருந்த சொல்லினை 12-ஆம் நூற்றாண்டில் ஞானமிர்தவுரை 'குதிரை' என்று குறிப்பிடுகிறது. அப்படியானால் 'கோவேறு கழுதை' என்று சொல்லுகிற அரும்பத உரைகாரர் காலம் 9-க்கும் 12-க்கும் இடைப்பட்ட காலம் ஆதலின் அரும்பதவுரைகாரர் 11-ஆம் நூற்றாண்டு என்றும் கருதலாம்.

**அரும்பத உரைகாரரின் சமயம்**

உரைகாரரின் சமூகப் பின்னணி பற்றி ஆய்கையில் சமயம் முதலிடம் பெறுகிறது. அவ்வகையில் இவ்வுரையாசிரியர் தம் உரைத்தொடக்கத்தில் விநாயகர் காப்பாக ஒரு வெண்பாவை அமைத்துள்ளார். அது,

*கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்*
*விரும்பும் விநாயகனை வேண்டி - அரும்பவிழ்தார்ச்*
*சேரமான் செய்த சிலப்பதிகார ரக்கதையைச்*
*சாரமாய் நாவே தரி* (கடவுள் வணக்கம்)

என்பதாகும். இதில் இவர் சைவ சமயத்தினர் என்று சொல்லுவர். இதற்கேற்ப ''நெடுவேலோன் குன்று - திருச்செங்கோடு'' என்று குறிப்பிடுவதால் இவர் சைவ சமயம் சார்ந்தவர் எனலாம். மேலும் இவர் ''அரங்கம் - திருவரங்கம்'', ''ஸ்ரீகோயில்'', ''மங்கல மடந்தைக் கோட்டம்'', ''ஆயிழைக் கோட்டம்'' என்று வைணவம், சமணம் சார்ந்த பல்வேறு கோயில்களைக் குறிப்பிடுவதால் இவர் அனைத்து சமய நெறிமுறைகளும் அறிந்தவர் எனக் கருத இடமுண்டு.

**உரை எழுதுவதற்கான நோக்கம்**

இவர் தோன்றிய காலம் சைவ சமயம் பெருமலர்ச்சி பெற்று வந்த சோழர் காலம். அதாவது முத்தமிழிலும் பெரும்புலமை எய்தியிருந்த இப்பேராசிரியர், தம் புலமை வெளிப்பாட்டுக்குத் தக்க முத்தமிழ்த்திறம் வாய்ந்த காப்பியம் எதுவும் வேறு இல்லாமையால் சிலப்பதிகாரத்தை உரை இயற்றுவதற்கு உரியதாகக் கொண்டார் என்பது இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதக் காரணம் எனக் குறிப்பிடலாம். இளங்கோவடிகள் செய்த காப்பியமும் விரிந்த சமய நோக்குடையதாய் இருந்தமையும் இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதத் தேர்ந்துகொண்டார் எனலாம்.

**முடிவுரை**

காலத்தால் முற்பட்ட சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய பெருமைக்குரியவர் அரும்பதவுரைகாரர் என்று முதன்முதலில் குறிப்பிட்டவர் அடியார்க்கு நல்லார் ஆவார். அவரது வரலாற்றை ஆராயுமிடத்து அவர் காலம் 11-ஆம் நூற்றாண்டு என்பதும், சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதும் பெறப்படுகிறது. மேலும் அவர் காலத்தில் முத்தமிழ்த் திறம் வாய்ந்த காப்பியம் சிலம்பைத் தவிர வேறு ஏதும் இல்லாமையே அவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதத் தோற்றுவாயாக அமைந்தது எனலாம்.

**துணைநூற்பட்டியல்**


- சாமிநாதையர் உ.வே (உரை.), *2009*(ஏ.ப.), சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகா, சென்னை.
- புலியூர்க்கேசிகன் (உரை.), *2009*, கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
- மலர்விழி மங்கையர்க்கரசி இராம(உரை.), *2008*, சீவக சிந்தாமணி மூலமும் உரையும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.